# கிழக்கு மாகாண சபைத் தேர்தலில்

# முஸ்லிம் காங்கிரஸ்




# ஏன்

தனித்துப்போட்டியிடவில்லை

ஐ.தே.க உடன் கூட்டு

மரத்தை விட்டுக்கொடுத்தது

# ?

# கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

- **ஏன் தனித்துப் போட்டியிடவில்லை?**
- **ஏன் ஐக்கிய தேசிய கட்சியுடன் கூட்டு?**
- **மரச்சின்னத்தை முஸ்லிம் கூட்டு முன்னணிக்காக விட்டுக் கொடுக்கத் தயாரில்லாத காங்கிரஸ் ஏன் யானைச் சின்னத்தைத் தேர்ந்தெடுத்தது.?**

அஸ்ஸலாமு அலைக்கும்,

எமது முன்னைய பிரசுரத்தில் அரசாங்கத்தின் வியூகத்தை விளக்கியிருந்தோம். கிழக்கு முஸ்லிம்களின் வாக்குகளைச் சிதறடிப்பதன் மூலமே தாங்கள் வெற்றிபெற முடியும் என்ற அரசின் கணக்குக்கு அமைவாக முஸ்லிம் அமைச்சாகள், முஸ்லிம் அரசியல் பிரதானிகளின் துணையுடன் அரங்கேற்றப்பட்ட நாடகத்தின் அடுத்தடுத்த கட்டங்களுக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முகம் கொடுக்க நேர்ந்தது.

கிசுகிசுக்கப்பட்டு பிசுபிசுத்துப் போன அரசாங்கத்தின் 'முஸ்லிம் கூட்டு முன்னணி' என்ற நாடகத்தின் பின்பு தங்களது வெற்றியை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுக்குள் இருந்த ஹிஸ்புல்லாஹ், திடீர் தௌபீக் போன்ற அதியுயர் பீட உறுப்பினர்களைப்பாவித்து, தனித்துத் தேர்தலில் போட்டியிடுமாறு தலைமைக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன. இவ்விருவரும் அரச முக்கியஸ்தர்களின் ஆலோசனையின் பேரில் முஸ்லிம் அமைச்சர்களுடன் சேர்ந்து கொண்டு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்துடன் இணைந்துதான் போட்டியிடவேண்டும் என்று ஆரம்பத்திலேயே அழுத்தம் கொடுத்தவர்களாவர். கிழக்கில் உள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போராளிகளில் பெரும்பான்மையினர் தனித்துப் போட்டியிட வேண்டும் என்று விரும்பிய போதும் அரசுடன் சேர்ந்துதான் போட்டியிட வேண்டும்



FREELANCE JOURNALIST & WRITER
125B, OSMAN ROAD,
KATHANKUDY-05

என்று கூறியவர்களில் மேற்படி இருவருமே மிக முக்கியமானவர்களாக விளங்கினர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை அரசுக்கட்சியுடன் இணைத்து தேர்தலில் குதிக்க வைப்பது சம்பந்தமாகத் தலைவர் ரவூப் ஹக்கீமுடன் அரசாங்கத்தின் முக்கிய புள்ளிகள் சிலர் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தமை பற்றிய செய்திகள் பத்திரிகைகளில் வெளிவந்ததை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

இப்பேச்சுவார்த்தையின்போது 'அரசினால் மதரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், இனரீதியாகவும், காணி விடயங்களிலும் முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை நிவர்த்தி செய்யுங்கள் ஆலோசித்துப் பார்க்கலாம்' என்று நமது தலைமை அரசின் அந்த முக்கிய புள்ளி களிடம் கூறியி ருந்தது.

> **மத ,பொருளாதார, இன ரீதியாகவும் காணி , குடியேற்ற விடயங்களிலும் முஸ்லிம்களுக்கு அரசு இழைக்கும் அநீதிகளை அரசு நிவரத்தி செய்ய வேண்டும் என்ற முஸ்லிம் காங்கிரஸின் நியாயமான கோரிக்கை கிழக்கு மாகாணத்திற்கான அரசின் நிகழ்ச்சி நிரலை அடியோடு மறுதலிப்பதால் முஸ்லிம் கூட்டு முன்னணி என்ற தந்திர உபாயத்தை அரசு அதன் அமைச்சர்கள் மூலம் அரங்கேற்றியது.**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இக்கோரிக்கை கிழக்கு மாகாணத்துக்கான அரசின் நிகழ்ச்சிநிரலை அடியோடு மறுதலிக்கும் வகையில் அமைந்திருந்தது. அரசும் இதனை உணர்ந்து கொண்டது. தங்களது பிரதான இலக்கையே சிதைக்கும் இக்கோரிக்கையை நிறைவேற்ற அரசு விரும்பவில்லை.

எனவே தனது இரண்டாவது திட்டத்துக்குள் அரசு நுழைந்தது. இவ்விரண்டாவது திட்டத்தின் செயற்பாட்டு வடிவத்தைத்தான்

“முஸ்லிம் கூட்டு முன்னணியும், சின்னமும்” நடந்தது என்ன? என்ற எமது முதலாவது பிரசுரத்தில் விளக்கியுள்ளோம்.

இரண்டாவது திட்டமும் தோல்வியடைந்தவுடன் அரசு மூன்றாவது திட்டத்திற்குப் பாய்ந்தது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை தனித்துப் போட்டியிட வைப்பது இம்மூன்றாவது திட்டமாகும். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்து போட்டியிட்டால், முஸ்லிம்கள் கிழக்கில் ஆளும் தரப்பினராக வராமல் தடுக்க முடியும் என்பதும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி – தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் கூட்டு இலகுவாக ஆட்சிபீடமேற முடியும் என்பதும் சிறுபிள்ளையும் புரிந்து கொள்ளும் உண்மைகளாகும்.

அரசின் இந்தத் திட்டத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானமாக எடுக்கும் வகையில் தூண்டுதல்களைச் செய்வதற்கு, நமது கட்சிக்குள் இருந்து மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த ஹிஸ்புல்லாஹ்வையும், திருமலையைச் சேர்ந்த திடீர் தௌபீக்கையும் தனக்குத் துணையாக அரசு தேர்ந்தெடுத்தது. அம்பாறை மாவட்டத்தில் இருந்து எவரையும் அரசினால் கையாள முடியவில்லை.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட வேண்டும் என்று கட்சி உறுப்பினர்கள் பலர் விரும்பிய போதெல்லாம், அரசுடன் இணைந்தே போட்டியிட வேண்டும் என்று கட்சித் தலைமைக்கு அழுத்தம் பிரயோகித்து வந்த ஹிஸ்புல்லாஹ்வும், தௌபீக்கும் “திடீர்” என ‘பல்டி’ அடித்து ‘தனித்துப் போட்டியிட்டால்தான் நாங்கள் போட்டியிடுவோம். இல்லாவிட்டால் போட்டியிடமாட்டோம்’ என்று கூறித் தலைமைக்கு தலைவலியை ஏற்படுத்தினர். அனைத்தும் அரசின் ஆலோசனைப்படியே நடந்தேறியது.
இவ்வாறான நெருக்கடி நிறைந்த சூழ்நிலையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசின் மூன்றாவது திட்டத்தையும் முறியடிக்கும் வியூகத்தை வகுத்துச் செயற்பட்டது.
அரசு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கழுத்தை இறுக்க இறுக்க நமது தலைமை ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேசவேண்டிய



நிர்ப்பந்தத்திற்கு உள்ளானது. இவ்வேளை, கிழக்கின் பல பாகங்களிலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இத்தேர்தலில் ஆளும் தரப்பாக அமையும் வியூகத்தையே அமைக்க வேண்டும் என்ற அபிப்பிராயமும் வலுத்துக் கொண்டு வந்தது.

தலைமைத்துவம், ஐக்கிய தேசிய கட்சியுடன் நடத்திய பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளிலும் முஸ்லிம்களின் தனித்துவ அங்கீகாரம், காணிப்பறிப்பை முறியடித்தல், மார்க்கத்துக்கு எதிராக ஜாதிகஹெல உறுமயவின் ஆலோசனைக்கு அடிபணிந்து அரசாங்கம் எடுக்கும் சட்டமியற்றல் முயற்சிகளை தடுப்பதில் உதவுதல், இஸ்லாமிய சுதந்திர செயற்பாடுகளுக்கு வரும் தடைகளை இணைந்து எதிர்கொள்ளல் போன்ற, சமகாலத்தில் முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் சவால்களுக்கு முகம் கொடுக்க ஐக்கிய தேசிய கட்சி -ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் உடன்பாடு கண்டது. அரசாங்கம், இவ்வாறான முஸ்லிம் மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளின் தோற்றுவாயாக இருப்பது மட்டுமன்றி, இச்செயற்பாடுகளை நிறுத்துவதற்கு உடன்படாத நிலைமையில் ஐக்கிய தேசிய கட்சியின் உடன்பாடு நமக்குத் தேவையாக இருக்கிறது.

> **அரசுஅதன் பேரினவாதக்கூட்டாளிகளுடன் இணைந்து மார்க்க ரீதியாகவும் இன ரீதியாகவும் முஸ்லிம்களுக்கு எதிராக செயல்படுவதை நிறுத்த பெரும்பான்மை சமூகத்தில் செல்வாக்குள்ள தேசியக் கட்சியொன்றின் அனுசரணை அவசியம்.**

இதுமட்டுமன்றி, இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில், கடந்த 2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில், ஐக்கிய தேசிய கட்சி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கு அமைவாக, எதிர்காலத்திலும் செயற்பட இணக்கம் காணப்பட்டது. 2005.10.28ஆம் திகதி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வெளியிட்ட

‘ரணிலை ஆதரிக்க முடிந்தது ஏன்?’ என்ற தலைப்பிலான பிரசுரத்தை மீண்டும் வாசித்தால் விபரங்கள் கிடைக்கும்.

அரசாங்கமும் அதன் பேரினவாதக் கூட்டாளிகளும், மார்க்க ரீதியாகவும், இன ரீதியாகவும் முஸ்லிம்களுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுத்துவரும் இக்கால கட்டத்தில் மத்திய அரசியலிலும், மாகாணத்திலும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதற்கு, சிறுபான்மை இனமான நமக்கு பெரும்பான்மை இனத்தின் மத்தியில் ஆதரவுள்ள ஒரு தேசியக் கட்சியின் அனுசரணையும் அவசியமானதே. ஆயினும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய தேசிய கட்சியுடன் கூட்டுச் சேரும் தீர்மானத்தை இந்தக் கட்டம் வரை எடுக்கவேயில்லை.

ஹிஸ்புல்லாஹ்வும், திடீர் தௌபீக்கும் அரசுடன் இணைந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிட்டால் தாங்களும் வேட்பாளர்களாகப் போட்டியிடுவது அல்லது தனித்துப் போட்டியிட வைத்து கட்சியை ஆளும் கட்சியாக வராமல் ஆக்கிவிட்டு, அரசாங்கக் கட்சியில் வேட்பாளராகப் போட்டியிடுவது என்றும் திட்டம் தீட்டிச் செயற்பட்டு வந்தனர். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இவர்களின் எல்லா நடத்தைகளையும் கூர்ந்து கவனித்துக் கொண்டும், தகவல்களைப் பெற்றுக் கொண்டும் இருந்தது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் சேர்ந்து போட்டியிட்டாலும் இவ்விருவரும் அரசின் கூலிகளாகவும், உளவாளிகளாகவுமே இருப்பர். நமது கட்சியை அரசுக்கு அடிமையாக்குவர். உள்ளே இருந்து கொண்டே காங்கிரஸை அழித்து சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் கரைத்து விடுவர். இந்த கொந்தராத்துடனேயே இவர்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள் என்பதைத் தலைமைத்துவம் உணர்ந்து கொண்டது. அலரிமாளிகையிலும், ஜனாதிபதி காரியாலயத்திலும் அடிக்கடி இவர்கள் நிகழ்த்திய சந்திப்புக்களின் விபரங்கள் கிடைத்த வண்ணமே இருந்தன. இந்தச் சதியை முறியடித்துக் கட்சியைக் காப்பாற்ற வேண்டிய சுமையும் தலைமையின் தோள்களில் விழுந்தது.



இவ்வாறு நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தபோது, அரசாங்கம் காலநேரப் பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டது. நியமனப் பத்திரம் தாக்கல் செய்ய வேண்டிய இறுதி நாளும் நெருங்கிக் கொண்டிருந்தது. எனவே நான்காம் கட்டத்தை அரசு செயற்படுத்த தொடங்கியது.

இனிமேலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிடம் நமது பருப்பு வேகாது என்று உணர்ந்து கொண்ட அரசின் வியூக வகுப்பாளர்கள், நியமனப் பத்திரம் தாக்கல் செய்வதற்கு முன்னரே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை உடைத்துப் பலவீனமாக்கித் தோற்கடிப்பதன் மூலம் தமது கனவை நனவாக்க முனைந்தனர்.

அரசின் ஆலோசனைப்படி கட்சிக்கு உள்ளே இருந்து குழிதோண்டிய ஹிஸ்புல்லாவும், தௌபீக்கும் வெளியில் சென்று சுரங்கம் தோண்டிக் கட்சியையும், சமுதாயத்தையும் கொள்ளையடிக்க முடிவெடுத்தனர். இவ்விருவரும் அலரி மாளிகையில் சமூகத்தின் தலையெழுத்தை விற்பதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நியமனப்பத்திரங்களில் கையெழுத்திட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தி நமது தலைமைக்கு எட்டியது.

**2000 ஆம் ஆண்டு தலைமைக்கு உரிமை கோரி கட்சியை சிதைக்கவும், 2006ம் ஆண்டு மரச் சின்னத்தைப் பறித்து கட்சியை அழிக்கவும் முயற்சி செய்தவர்கள் அடுத்த வெறியாட்டத்திற்கு தயாராகிவிட்ட நிலையில் முஸ்லிம் காங்கிரஸ் வெற்றி வியூகத்தை அமைக்க இருந்த சிறந்த வழி ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டிணைவதே.**

இனி நாம் தாமதிக்க முடியாது; சதியின் உச்சகட்டம் அரங்கேறிவிட்டது. 2000 ஆம் ஆண்டு கட்சியைப் பிடுங்கி அழிக்க அன்றைய அரசுடன் சேர்ந்து, நீதிமன்றத்தில் தலைமைக்கு உரிமைகோரிய அதே கூட்டம், 2006ம் ஆண்டு கிழக்கில்

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்வதற்குரிய இறுதிக் கட்டத்தில் நமது கட்சியின் மரச் சின்னத்தைப் பிடுங்கி எறியவும், கட்சியைத் தடை செய்யவும் வழக்குத் தாக்கல் செய்து, தலைவரையும், செயலாளர் நாயகத்தையும் இயங்காமல் ஆக்கிய இந்த அரசின் இதே கூட்டம் எழுந்து நின்று வெறியாட்டம் ஆடத் தொடங்கி விட்டது. இனி நாம் முடிவெடுத்தே ஆகவேண்டும்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலுக்கு நியமனப்பத்திரம் தாக்கல் செய்ய இருக்கும் இந்த இறுதிக்கட்டத்தில், நீதிமன்றம் சென்று நமது கட்சியையும், மரச்சின்னத்தையும் தடை செய்து நம்மை சுயேச்சைக் குழுக்களாகப் போட்டியிட வைத்து கிழக்கு முஸ்லிம்களை ஆளும் அந்தஸ்த்து இல்லாத சமுதாயமாக ஆக்கிவிடுவார்கள் என்று அஞ்சினோம். எனவே கட்சியையும், கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களின் அரசியல் அபிலாஷைகளையும் காப்பாற்றுவதற்கு மாற்று உபாயம் வகுத்தோம்.

உடனடியாக இருந்த ஒரே வழி, ஐக்கிய தேசியக் கட்சியை முஸ்லிம் காங்கிரஸின் சிறகுகளுக்குள் கொண்டுவருவதுதான். ஐக்கிய தேசிய கட்சியுடனான பேச்சுவார்த்தைகளும் நம்பிக்கை தரக்கூடியனவாக இருந்தன. கிழக்கில் ஆளும் அந்தஸ்த்தையும் பெற்றுக் கொள்ளும் வாய்ப்புண்டு. நமது கட்சியையும் காப்பாற்றிக் கொள்ள முடியும். அரசியல் அதியுயர்பீடம் ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டுச்சேர்ந்து தேர்தலில் போட்டியிடுவது என்று தீர்மானம் மேற்கொண்டது.

அரசாங்கம் முஸ்லிம் அமைச்சர்களுடனும் நமது கட்சிக்குள் இருந்த பிரமுகர்களுடனும் சேர்ந்து முஸ்லிம் மக்களையும், முஸ்லிம் காங்கிரஸையும் தோற்கடிக்க வகுத்த வியூகத்தின் அடிப்படையிலான மூன்று கட்ட முயற்சிகளை முழுமையாகவும் 4ம் கட்ட முயற்சியை பகுதி அளவிலும் தோற்கடிக்க எம்மால் முடிந்தது; அல்ஹம்துலில்லாஹ்.



நான்கு கட்ட முயற்சிகளையும் சுருக்கமாகத் தருகிறோம்.

1. **ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை அரசுடன் கூட்டமைக்க நிர்ப்பந்தித்தல்**
   இதன் மூலம் அரசு வெற்றியடைதல். அவர்கள் விரும்பிய பொம்மை முதலமைச்சரை, நியமித்து கிழக்கில் பேரினவாத நிகழ்ச்சி நிரலை நிறைவேற்றல்.

2. **முஸ்லிம் கூட்டு முன்னணியை உருவாக்குதல்.**
   இதன் மூலம் தெரிவு செய்யப்படுகின்ற சபை உறுப்பினர்களைத் தேர்தலின் பின்பு இணைத்துக் கொண்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை நட்டாற்றில் விட்டுவிட்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியமைத்தல் - நிகழ்ச்சி நிரலை நிறைவேற்றல்.

3. **ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைத் தனித்துப் போட்டியிடத் தூண்டுதல்**
   இதன் மூலம் இலகுவாக வெற்றிபெற்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை எதிர்க்கட்சியாக்கி, இக்கட்சியால் ஒன்றும் செய்ய முடியாது என்று மக்களை நம்ப வைத்து, மக்களுக்குள் செல்வாக்கிழக்கச் செய்து அழித்து விடுதல் - நிகழ்ச்சி நிரலை நிறைவேற்றல்.

4. **மேற்சொன்ன மூன்று சதித்திட்டங்களும் நிறைவேறாவிட்டால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகர்களைப் பிரித்தெடுத்து கட்சியின் வாக்கு வங்கியில் வீழ்ச்சியை ஏற்படுத்தல் என்ற பலவீனமான திட்டம்.** இத்திட்டத்தின் அடிப்படையிலேயே ஹிஸ்புல்லாவும், திடீர் தௌபீக்கும் பிரித்தெடுக்கப்பட்டார்கள்.

தற்போது நடைமுறையில் இருக்கும் நான்காவது திட்டத்தை முழுமையாக முறியடிப்பது மக்களின் கைகளிலேயே தங்கியிருக்கிறது. முடிந்தவரை போராடினோம்;

போராடிக்கொண்டிருக்கிறோம். முடிவு அல்லாஹ்வின் கையில். அல்லாஹு" அக்பர்.

- ஏன் தனித்துப் போட்டியிட வில்லை
- ஏன் ஐக்கிய தேசிய கட்சியுடன் கூட்டு
- மரச் சின்னத்தை முஸ்லிம் கூட்டு முன்னணிக்காக விட்டுக் கொடுக்கத் தயாரில்லாத காங்கிரஸ் ஏன் யானைச் சின்னத்தைத் தேர்ந்தெடுத்தது.?

**சதிகளை முறியடித்து முஸ்லிம் மக்களையும், கட்சியையும் பாதுகாப்பது ஒன்றே நம்முன் இருந்த ஒரே தெரிவாகும். இந்தப் பாதுகாப்புக்காகவே சதிகளை முறியடிக்கும் வகையில் முடிவு மேற்கொள்ளப்பட்டது.**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்
"தாருஸ்ஸலாம்"
தலைமைக் காரியாலயம்
கொழும்பு - 02



# கிழக்கிற்கு முஸ்லிம் முதலமைச்சர் தெரிவாவதை தவிர்க்க அரசு அமைத்த வியூகங்கள்.

## முயற்சி 01

முஸ்லிம்களின் காணி, மதவழிபாடுகள், குடியேற்றம்..... என்பவற்றிற்கான தீர்வு வழங்காமல் முஸ்லிம் காங்கிரஸை அரச தரப்புடன் தேர்தலில் இணைப்பதன் மூலம் மக்களிடம் உள்ள முஸ்லிம் காங்கிரஸின் நம்பகத்தன்மையை அழிப்பது.

## முயற்சி 02

முயற்சி 01 நிறைவேறாத போது அரசில்உள்ள ஏஜென்டுகளான அதன் அமைச்சர்களை அனுப்பி முஸ்லிம் காங்கிரஸ் உடன் கூட்டு முன்னணி அமைப்பதன்மூலம் ஏனைய சமூகங்களில் இருந்து முஸ்லிம்களை தனிமைப்படுத்தி, இனமுரண்பாடுகளுக்கு வழி சமைப்பதும் தேர்தலின் பிறகு வெற்றி பெறுபவர்களை வலைத்துப்பிடித்து அரசபக்கத்துக்கு விலைக்குவாங்கி முஸ்லிம் காங்கிரஸை பலவீணப்படுத்துவதும்.

## முயற்சி 03

மேற்குறிப்பிட்ட இல 01ம், 02ம் கைகூடாத பட்சத்தில் முஸ்லிம் காங்கிரஸை மரச்சின்னத்தில் தனித்துப் போட்டியிட தனது ஏஜென்டுகள் மூலம் தூண்டி முஸ்லிம் காங்கிரஸை கிழக்கு மாகாண சபையில் எதிர்கட்சி ஆக்கியதன் பின் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களை அரசுபக்கம் இழுத்து பதவிகள் வழங்கி முஸ்லிம் காங்கிரஸை மிகப் பலவீனமாக்குதல்.

## மொத்தத்தில்.......

என்ன விலை கொடுத்தேனும் முஸ்லிம் காங்கிரஸை அழிப்பதே சுதந்திர ஐக்கிய முன்னணியினதும் அதனுடன் ஒட்டிக்கொண்டிருக்கும் முஸ்லிம் அமைச்சர்களினதும் ஒட்டுமொத்த குறிக்கோளாக இருந்தது

"

கிழக்கு மாகாண ஆட்சி அதிகாரம்
சகல இனங்களுக்கும் நியாயமான
ஒன்றாக அமைந்து
இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வும்
சக வாழ்வும் நிலைபெற்று
சுபீட்சம் மிக்க கிழக்கு
உருவாவதற்குள்ள ஒரே வழி
ஐக்கிய தேசிய கட்சியுடன்
கூட்டிணைந்து
முஸ்லிம் முதலமைச்சரைப் பெற்று
பெரும்பான்மை, சிறுபான்மை
சமூகங்கள் அனைத்தினதும்
ஒன்றுபட்ட வெற்றியின் மூலம்
தெரிவாகும் ஆட்சியை அமைப்பதே.

"




இப்பிரசுரம் இல: 51, வொக்ஷோல் லேன், கொழும்பு 02.
முஸ்லிம் காங்கிரஸ் தலைமையகத்தினால் HL 1/2, டயஸ் பிளேஸ், கொழும்பு 12.
கொம்பிரிண்ட் சிஸ்டம்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.